IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CMP.NO.3391/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | CHELLAPPAN |
| FATHER'S NAME | : | GOVINDASAMY |
| VILLAGE | : | B.N PALAYAM PUTHUR |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 3rd day of January 2025.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பி.என் பாளையம் புதூர் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 19.04.2024 அன்று நடைப்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஓட்டு போடுவதற்காக எங்கள் ஊரில் உள்ள அரசு பள்ளியில் அமைக்கப்பட்டு இருந்த வாக்குச்சாவடிக்கு எனது காரில் நானும் எனது மனைவி தீபா என்பவரும் மாலை 4.30 மணிக்கு சென்று எங்களது வாக்குகளை செலுத்தி விட்டு மீண்டும் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது தட்சணாமூர்த்தி, ஜெயமுருகன், சேகர், ஜெயகணேஷ், மேகநாதன், சத்தியபிரசாத், கருணாகரன், சாந்தி, அஞ்சலி, ரமேஷ், ஏழுமலை மற்றும் சரவணன் ஆகியோர் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் சார்பாக ரோட்டிலேயே பந்தல் அமைத்து இருந்தார்கள். அவர்கள் அமர்ந்து இருந்த பந்தலுக்கு அருகில் இருச்சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருந்தது. நான் ஒலி எழுப்பியும் அவர்கள் விலகி எனது காருக்கு வழி விடவில்லை. எனவே நான் அவர்களின் பந்தலை இடிக்காமல் செல்வதற்காக அதனை பார்த்துக்கொண்டு காரை ஓட்டியபோது அங்கிருந்த இருச்சக்கர வாகனத்தின் மீது எனது கார் இடித்து இருச்சக்கர வாகனம் கீழே விழுந்தது. நான் இறங்கி வந்து தட்சணாமூர்த்தியிடம் வண்டிகளை ஓரமாக விடமாட்டீர்களா என்று கேட்டபோது சத்தியபிரசாத் என்பவர் பின்னால் இருந்து வந்து கைகளால் எனது பின்புற தலையில் அடித்தான். என்னை அடிப்பதை பார்த்த என் மனைவி வந்து அவர்களிடம் கேட்டபோது சத்தியபிரசாத், ரமேஷ், தட்சணாமூர்த்தி, அஞ்சலி, சாந்தி ஆகியோர் எனது மனைவியை தேவிடியா, உனக்கெல்லாம் எதற்கு காரு நடந்து செல்ல வேண்டியது தானே என கேட்டார்கள். மேலும் அவர்கள் நாங்கள் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் எங்களை பகைத்துக் கொண்டால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். ஊர் பொதுமக்கள் என்னை அவர்களிடம் இருந்து மீட்டு அனுப்பி வைத்தார்கள். நான் இது குறித்து லத்தேரி காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு நானும் எனது மனைவியும் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எதிரிகள் என் மீதும் எனது உறவினர்கள் மீதும் பொய் புகார் அளித்து சிறைக்கு அனுப்பினார்கள். நான் அளித்த புகாரின் மீது போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. போலீசார் ஒரு தலைபட்சமாக விசாரித்து எங்கள் மீது வழக்கு பதிவு செய்தார்கள். எனவே எனது புகாரை ஏற்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேற்படி குற்ற நிகழ்வின் காணொலி அடங்கிய பென்டிரைவ் மா.சா.அ.1 ஆகவும் காவல் துணைக்கண்காணிப்பாளருக்கும், மாவட்ட காவல்

கண்காணிப்பாளருக்கும் நான் அனுப்பிய புகாரின் நகல்கள் முறையே மா.சா.அ.2 மற்றும் மா.சா.அ.3 ஆகவும், மேற்படி புகார்களை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை முறையே மா.சா.அ.4 மற்றும் மா.சா.அ.5 குறியிடு செய்யப்படுகிறது. லத்தேரி காவல் நிலையத்தில் அளித்த சி.எஸ்.ஆர் மா.சா.அ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 03.01.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

ஓம்/– ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.